பக்கங்கள் இரண்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 3-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 07 சனிக்கிழமை (20 - 05 - 2000) VALAMPURI ஒலி: 152

## ★ அரசும்புலிகளும் யுத்தநிறுத்தம் செய்து

# மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்

## யாழ் . ஆயர் ஜனாதிபதிக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த இருபது வருட காலமாக நடைபெற்றுவரும் போரின் மூலம் சமாதானத்தைக் காண முடியவில்லை.

போரை! நம்பி சமாதானத்தை மீட்டெடுக்கலாம் என்ற தவறான கருத்தை விட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலமாகவோ, அல்லது ஐக்கிய நாடுகள் சார்ந்த அமைப்புகள் மூலமாகவோ, நீதியுடன் கூடிய போர் நிறுத்தத்தை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தர நாயகம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைக் கேட்டுள்ளார்.

யாழ்.ஆயர் அதி.வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் அவர்கள் ஜனாதிபதிக்குஎழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் தற்போது நடைபெற்றுவரும் யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது இந்த யுத்தத்தினால் மக்கள் அகதிகளாகி சொல்லொணாத் துன்பதுய

[2 ஆம் பக்கம் பார்க்க]

## பிரமதர் வாஜ்பாய் கருணாநிதி சந்திப்பு

(சென்னை)

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை தமிழக முதல்வர் மு. கருணாநிதி நேற்று புதுடில்லியில் சந்தித்தார்.

இரு தலைவர்களும் இலங்கையின் தற்போதய நிலவரம் குறித்துப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் பேச்சுவார்த்தை பற்றிய விபரம் எதுவும் தெரியவரவில்லை. [வ]

## நோர்வே வெளி விவகார பிரதி அமைச்சர் திங்கள் வருகிறார்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வே நாட்டின் வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் கேமன் யொகசன் நாளை மறுதினம் இலங்கை வரவுள்ளார்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்கிமுடன்வரும்

(2ஆம் பக்கம் பார்க்க]

## பஸ்சேவை இன்றி பயணிகள் கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துசபை, நேற்று ஊரடங்கு தளர்த்தப்பட்ட போதும் தனது வழமையான சேவைகளை நடத்தவில்லை இதனால் பஸ் பிரயாணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். ஊரடங்குச் சட்டம் அமுலில்

(2ஆம் பக்கம் பார்க்க)

### மட்டுவிலில் ஷெல் வீச்சு

## ஒரே குடும்பத்தை சேர்ந்த 2 பேர் உட்பட 4பேர் காயம்

(புலோலி)

மட்டுவிலில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஷெல் வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்,இவர்களைவிடமேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மந்

[2ஆம் பக்கம் பார்க்க]

## ஊரடங்கு தளர்வு பற்றி ஒலிபெருக்கியின் மூலம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் ஊரடங்கு தளர்த்தப்பட்டமைகுறித்து தகவல்தொடர்புகளில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக நேற்று மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர்.

இது குறித்து ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் க.மணிபல்லவராஜன், வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன், வலி. தென் மேற்கு பிரதேச சபைத்தலைவர் அன்ரன் ஜோண்சன் ஆகியோர் 513 படைத்தலைமை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைக் குண்டுதாரிகள் 12 பேர் கைதுசெய்யப்பட்டார்கள்

[கொழும்பு]

தற்கொலைக்குண்டுதாரிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 12பேரைக் கொழும்பு பொலிசார் கைது செய்துள்ளனர்.

தமிழ் அரசியல்வாதிகள், அமைச்சர்கள், காவல்துறை உயர் அதிகாரிகளைக்

( 2ஆம் பக்கம் பார்க்க)

## தப்பிஓடிய இராணுவத்தினர் 1500பேர் இராணுவத்தில் இணைவு

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களில் ஆயிரத்து ஐந்நூறு பேர் திரும்பி வந்து இராணுவத்தில் இணைந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தப்பி ஓடிய இராணுவத்தினர் மீண்டும் 24-ம் திகதிக்கிடையில் இராணுவத்தில் இணையலாம் என்ற அறிவிப்பு விடுவிக்கப்பட்ட இரண்டு தினங்களில் இந்த ஆயிரத்து ஐந்நூறு பேரும் மீண்டும் இராணுவத்தில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யுத்த காலத்தில் போராடுவதற்கு பயிற்சி பெற்ற வீரர்கள் தேவையான இச்சந்தர்ப்பத்தில் இவர்கள் மீண்டும் இராணுவத்தில் இணைந்திருப்பது படையினருக்கு அதிக பலத்தை அளிக்கும் என்றும் இராணுவப் பேச்சாளர் கூறினார்.

எதிர்வரும் 24-ம் திகதிக்குள் கடமைக்குத்திரும்புபவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ★ இனப்பிரச்சினைத் தீர்விற்கு

## சுயாட்சி அமைப்பே சிறந்த தீர்வாக அமையும்

### மார்க்கனிஸ்ட்கம்யூனிஸ்கட்சி

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தனித் தமிழ் ஈழம் தீர்வாகமாட்டாது. ஒறுன்பட்ட இலங்கைக்குள் ஈழத்தமிழ் மக்கள் சமமாக வாழும் சுயாட்சி அமைப்பே தீர்வாகும் என்று மார்க்கனிஸ்ட் கம்யூனிஸ்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்

(2ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

★ மட்டக்களப்பு குண்டு வெடிப்பு

# நீதி விசாரணை மேற்கொள்ளுமாறு யோசப் எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்

[கொழும்பு]

மட்டக்களப்பில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக இளைப்பாறிய நீதிபதி ஒருவர் தலைமையில் உடனடியாக நீதி விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட எம்பியும் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற குழுத் தலைவருமான யோசப்பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இக் குண்டு வெடிப்புச் சம்பவம் காரணமாக 29 பேர் மரணமடைந்தும் 74 பேர் காயமடைந்தும் உள்ளனர். இறந்தவர்களில் 27 பேரும், காயமடைந்தவர்களில் 54 பேரும் அப்பாவிப் பொது மக்களாகும்.

குறிப்பிட்ட இடமொன்றில் குண்டு ஒன்று இருப்பதாகத் தகவல் கிடைத்தும் அவ்விடத்தில் இருந்து பொது மக்களைபொலிசார் அப்புறப் படுத்தத் தவறிவிட்டனர், காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் சூட்டுக் காயங்களுக்குள்ளானதாகத் தெரிகின்றது,

குண்டுவெடிப்பு நடைபெற்ற பத்துநிமிடங்களுக்குப் பின்பே சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றதாக சாட்சியங்கள் உள்ளன.

இச் சம்பவம தொடர்பாக நாட்டின் தலைவி என்ற முறையில் உடனடியாக நீதி விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுள்ளார்.

(வ-14)

## திருடர்கள் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சுந்தசுவாமி கோவிலுக்கு முன்பாகவுள்ள பார்மசியில் திருட முயன்ற கோஷ்டி ஒன்று இராணுவத்திடம் வசமாக மாட்டுப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இரவு வேளை பார்மசியில் திருடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நான்கு பேரே இவ்வாறு இராணுவத்தினால் கைது செய்யப்பட்டனர். (ந)

## உதவிப்பணம் பெறமுடியும்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் ஏற்பல் மாதத்திற்குரிய பொதுசன உதவிப்பணம் உரியதபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

உரியவர்கள் தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந-120)

## தப்பிஓடிய இராணுவத்தினர் 24 வரை சரணடையலாம்

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் இராணுவத்தினரிடம் சரணடைவதற்கு 17ம் திகதியிலிருந்து 24ம் திகதி வரை அரசாங்கம் அவகாசம் வழங்கியுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய படை வீரர்கள் அருகில் உள்ள பொலிஸ் இராணுவ முகாம்களில் 17ம் திகதியில் இருந்து 24ம் திகதிக்குள் இராணுவத்தினரின் முகாம்களில் வந்து சரணடைந்து விடும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(வ)

## சொந்தப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கக் கோரிக்கை!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் கடமையாற்றும் தென்பகுதியைச் சேர்ந்த சிறைக்காவலர்கள் தம்மைத் தமது சொந்தப்பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்குமாறு சிறைச்சாலை தலைமையகத்தைக் கோரியுள்ளனர்.

யாழில் தற்போது நிலவும் சூழ்நிலையில் இங்கு இருக்க விருப்பமில்லை என்று அவர்கள் தலைமையகத்துக்குத் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ். ஆஸ்பத்திரியில் கடமை புரியும் சிங்களத் தாதிமார் தம்மைத் தென்பகுதிக்கு அனுப்பி வைக்குமாறும் ஐ.சி.ஆர்.சி.யிடம் உதவி கேட்டிருப்பதாகத் தெரிகின்றது.

(வ)

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞன்பலி

(யாழ்ப்பாணம்)

சுந்தர்மடம் பகுதியில் நேற்றுக்காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனான இளைஞர் ஒருவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 28 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞன் நீல நிற ரீசேட்டும், பச்சை நிற நீளக் காற்சட்டையும் அணிந்துள்ளார் என்றும், கறுப்பு நிற முடையவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரின் கால்கள் நைலோன் கயிற்றினால் கட்டப்பட்டிருந்தது.

(வ-12)

## மரண அறிவித்தல்

### திருமதி யூலியஸ் பிரசன்ரேசன்

மாதகலைப்பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் 319 பாங்ஷால் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி யூலியஸ் பிரசன்ரேசன் அவர்கள் 17-05-2000 அன்று காலமாகி விட்டார். இவர் சேவியர் அன்ரன் [ருவிங்கிள் ஸ்ரார்] யூலியசின் அன்பு மனைவியும், டனிஸ், டிலீப், ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற பிரான்சிஸ் யோசவ் செல்வநாயகி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செபதேயு சேவியர், சேவியர் யூலியற்றின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான ஜான்சன் யோசவ், அருட்சகோதரி [C.P.M] கிளமென்சியா, மற்றும் பூபாலன் (கனடா) வெனிக்கினா மேரி மெக் டலீன், மரிய கொறற்றி, லூசியா, அற்புத ராஜா (பிரான்ஸ்), அன்ரன் செல்வக்குமார் (பிரான்ஸ்), வினிசியா, ஆகியோரின் சகோதரியும் யேசுதாசன், அருமைத்துரை, ஆகியோரின் மைத்துனியும் அனுஸ்ரதாஸ், ஜெனிஸ்ரதாஸ், நிரோஜா ஆகியோரின் பெரிய தாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 18-05-2000 அன்று பிற்பகல் 2 மணியளவில் மாதகலிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மாதகல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யூலன் அன்ரன் சேவியர்
(கணவன்)

## மூன்றாந்தர...

ரங்களையும், பேரிழப்புகளையும் சந்திக்க வேண்டியுள்ளதுடன், யுத்த அனர்த்தினால் எங்கேபோவது என்று தெரியாமல் மக்கள் உள்ளனர்.

பாரிய உயிர் இழப்புக்களை தவிர்க்கும் வகையில் யுத்த நிறுத்தம் ஒன்று அவசியமானதாகும். இதன் அவசியத்தை நன்குணர்ந்தபடியால் தான் விடுதலைப்புலிகளும் போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தனர் இந் நிலையில் விடுதலைப் புலிகளும், இராணுவத்தினரும் போரை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

மூன்றாந்தர மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு இரு சாராரும் முன்வரவேண்டும் கடந்தஇரு பது வருடங்களாக ஆட்சியில் இருந்த அரசுகள் நீதியான அமைதியான தீர்வைக்காண முடியவில்லை கடைசி நேரத்தில் ஆவது வெளிநாடுகளின் மத்தியஸ்தத்துடன் தீர்வு காணப்பட வேண்டும்.

என்றும் அம்மடலில் ஜனாதிபதியிடம் ஆயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(வ)

## சமாதானம் வேண்டி வழிபடவும் அதிமேற்றாணியார் வேண்டுகோள்

நாட்டில் சமாதானம் வேண்டி இம் மாதம் 27-ம், 28- ம்திகதிகளில் கொழும்புப் பகுதியில் விசேட சமய ஆராதனைகளை நடத்துமாறு, கொழும்பு அதிமேற்றாணியார் நீக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஞாயிறு தினங்களில் சமய ஆராதனைகளின் போது கிடைக்கும் பொருட்களை, வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் படையினருக்கு அன்பளிப்பாக வழங்குமாறும், அவர் மேலும் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

(ந)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மாத்திரம் மறு அறிவித்தல் வரை இருபத்திநாலு மணி நேரமும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டு மீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

[வ]

## வன்னிக்கு மருந்து அனுப்ப ஏற்பாடு

(வவுனியா)

வன்னிப்பகுதி வைத்தியசாலைகளுக்கு ஒரு தொகுதி மருந்து வகைகள் எதிர்வரும் 23ம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னிப்பகுதி ஆஸ்பத்திரிகளில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவிவருவது தெரிந்ததே.

(வ)

## பஸ்சேவை....

இல்லாத பகுதிகளுக்கான சேவைகளை கொக்குவில் இந்துக்கல்லூரியடி கல்வியங்காட்டுச் சந்தி பரமேஸ்வராச் சந்தி போன்ற இடங்களில் இருந்து நடாத்தி வந்தது இப்பொழுது அந்தச் சேவைகளும் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது;

மக்கள் இடம் பெயர்ந்து குடாநாட்டின் பல்வேறு இடங்களுக்கும் செல்லும் இச்சந்தர்ப்பத்தில் பஸ்சேவை இல்லாதது அவர்களுக்கு மிகுந்த அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தனியார் மினிபஸ் சேவையும் டீசலுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தனது சேவையை நடத்தி வருகிறது.

[வ]

## ஒரே...

திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மட்டுவில் தெற்கு பரமலிங்கம் தங்கமணி (வயது 48) பரமலிங்கம் தனுஷன் [வயது 1!] இவரது வலது கை துண்டிக்கப்பட்டுள்ளது.

இவர்களைவிட மட்டுவிலைச் சேர்ந்த செல்லப்பா மகாதேவா (வயது 39), கனகசபை சாந்தினி (வயது24) ஆகியோரே ஷெல் வீச்சில் காயமடைந்தவராவர்.

[வ52]

## சுயாட்சி...

கூறியிருப்பதாவது. தனித் தமிழ் ஈழம் குறித்து முதலமைச்சர்எடுத்துள்ள நிலையை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கோரியுள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கத்துடன் பா.ம.க, ம.தி.மு.க ஆகிய கட்சிகள் எடுத்துள்ள நிலையை மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட்கட்சி வன்மையாக கண்டிக்கிறது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[52]

## வலி.தென் மேற்கு தலைவர் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, மெமோறியல் கல்லூரி, ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பாடசாலைகளில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்களை வலி.தென் மேற்குப் பிரதேச சபைத்தலைவர் அன்ரன் ஜோண்சன் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

இடம் பெயர்ந்தோருக்கான குடிநீர் வசதி, மலசல கூட வசதி போன்ற அத்தியவசிய தேவைகளை உடன் வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## ஊரடங்கு...

யகத்துடன் நேரில் தொடர்பு கொண்டு நிலைமைகளை எடுத்துக் கூறினர்.

இதனை அடுத்து ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளதாக ஒலி பெருக்கி மூலம் இராணுவத்தினர் பொதுமக்களுக்கு அறிவித்தனர்.

இவ் அறிவிப்பிற்கு முன்னர் வீடுகளிலிருந்துவெளிச்சென்ற மக்களுக்கு ஏற்பட்ட சிரமங்கள் குறித்து என்.திரிலோகநாதன் பலாலி படைத்தலைமையகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் பண்டிபிற்றியவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

(ந)

## நோர்வே ..

யொகசன்மூன்று தினங்கள் இங்கு தங்கியிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை குறித்துஉரையாடுவர்.

இதேவேளை யாழ்குடாப்பகுதியில் இடம் பெறும்சண்டைகாரணமாக தாம் உற்சாகமிழந்துவிடவில்லை எனவும், தமது சமாதான முயற்சி நீண்டகால நோக்கமுடையதென வும்விசேடதுாதுவர் சொல்ஹெம் தெரிவித்தார்.

(ந)

## தற்கொலை...

கொலை செய்யும்நோக்குடன் அவர்கள் கொழும்பிற்குள் நுழைந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

120 கிலோ கிராம் வெடிப் பொருள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[வ]

பத்திரிகை ''வலம்புரி'' ஆசிரியர் ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 20 ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.